# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# மானியக் கோரிக்கை எண். 37

# மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2016–2017

## முன்னுரை

இந்த அரசு, பூரண மதுவிலக்கை எய்தும் வகையில், முதற்படியாக டாஸ்மாக் சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் மற்றும் அதனுடன் இணைந்த மதுக்கூடங்களின் பணி நேரம் குறைக்கப்படும் என ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி, 24.05.2016 முதல் டாஸ்மாக் சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் மற்றும் அதனுடன் இணைந்த மதுக்கூடங்களின் பணிநேரம் காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை என்று முன்னர் இருந்ததற்கு பதிலாக தினமும் நண்பகல் 12 மணி முதல் இரவு 10 மணி வரையாக உள்ளது. மேலும், டாஸ்மாக் சில்லறை விற்பனை மதுபானக் கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்படும் எனவும் 500 கடைகள் கண்டறியப்பட்டு மூடப்படும் எனவும் ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி, 500 டாஸ்மாக் சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் 19.06.2016 முதல் மூடப்பட்டன.

மேலும், இந்த அரசு, கள்ள மற்றும் போலி மதுவகைகளை ஒழிப்பதற்கு எடுக்கப்பட்ட அனைத்து முனைப்பான நடவடிக்கைகளிலும் வெற்றி கண்டுள்ளது. இதனால், சீரிய ஆயத்தீர்வை நிர்வாகம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## 2. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை – நிர்வாக அமைப்பு மற்றும் செயல்பாடுகள்

**2.1** தமிழ்நாடு அரசின் உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் நான்கு அமைப்புகள் செயல்படுகின்றன.

(i) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

(ii) மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு

(iii) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்)

(iv) போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு

## 3. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

**3.1** **1937**–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் அச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளைச் செயல்படுத்தும் அதிகாரி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் ஆவார். அதன் விவரங்கள் **இணைப்பு–1–**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**3.2** மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையருக்கு உதவியாக, மாநிலத் தலைமையிடத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் இரண்டு இணை ஆணையர்களும், அரசின் இணைச் செயலாளர் நிலையில் ஒரு நிதிக்கட்டுப்பாட்டு அலுவலரும் மற்றும் துணை ஆட்சியர் நிலையில் ஐந்து உதவி ஆணையர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

**3.3** மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர்கள், 1937–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் வெவ்வேறு வழிவகைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். மாவட்ட ஆட்சியருக்கு உதவியாக சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு துணை ஆணையரும் (ஆயத்தீர்வை) மற்றும் பிற மாவட்டங்களில் துணை ஆட்சியர் நிலையில் உதவி ஆணையரும் (ஆயத்தீர்வை), இவர்களுக்கு உதவியாக வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், ஆயத்தீர்வை ஆய்வாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**3.4** துணை ஆட்சியர் நிலையில், வடிப்பாலை அலுவலர்களும் மற்றும் ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களும் முறையே, வடிப்பாலைகள் மற்றும் இந்தியத்

தயாரிப்பு அயல்நாட்டு மதுபான, பீர் மற்றும் ஒயின் உற்பத்தித் தொழிற்சாலைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் 1955–ஆம் ஆண்டின் மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்புச் சட்டம் மற்றும் அவற்றின் கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி ஆயத்தீர்வை விதிக்கப்படவேண்டிய பொருள்களுக்கு ஆயத்தீர்வை விதித்தல் மற்றும் சாராவி பயன்பாட்டினைக் கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகளை இரசாயன தொழிற்சாலைகள் மற்றும் பிணைமுறி கிடங்குகள் ஆகியவற்றில் மேற்கொள்வதற்காக வருவாய்த் துறையைச் சார்ந்த வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்கள் நிலையிலுள்ள அலுவலர்கள் முறையே ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களாகவும், பிணைமுறி அலுவலர்களாகவும் (Bonded Manufactory Officers) பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**சர்க்கரை ஆலைகள் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு**

**3.5** கரும்பிலிருந்து சர்க்கரை தயாரித்த பின் துணைப் பொருளாக உற்பத்தியாவது கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆகும். நம் மாநிலத்தில், சாராவி உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருள் இதுவேயாகும். தற்போது நம் மாநிலத்தில் **46** சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றில்

**16** கூட்டுறவுத் துறையிலும், **3** பொதுத் துறையிலும் மற்றும் **27** தனியார் துறையிலும் உள்ளன. இதுபற்றிய விவரங்கள் **இணைப்பு – 2**–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**3.6** **1958–**ஆம் ஆண்டு தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின்படி, மாநில கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாட்டு அலுவலர் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் ஆவார். கருப்பஞ்சாற்றுக் கசண்டு வைத்திருத்தல், விற்பனை, பயன்பாடு, போக்குவரத்து, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியவற்றிற்கான உரிமம் மற்றும் அனுமதி ஆணைகள் தகுதியுடைய அதிகாரிகளால் மேற்படி விதிகளின்படி வழங்கப்படுகின்றன.

**3.7** **1958–**ஆம் ஆண்டின் தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின் கீழ் வெளி மாநிலங்களுக்கு கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்ய எம்.எல்.**2** அல்லது எம்.எல்.**4** உரிமம் பெற்றவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது. மேற்படி கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்ய உரிமம் வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உரிமம் வழங்குவதற்கு முன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாட்டு அலுவலரான

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற வேண்டும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டிற்கு நிர்வாக சேவைக் கட்டணமாக மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.300/– வீதம் வசூலிக்கப்படுகிறது.

**வடிப்பாலைகள் மற்றும் சாராவி**

3.8 தமிழ்நாட்டில் 19 வடிப்பாலைகள் சாராவி (Alcohol) உற்பத்தி செய்கின்றன. இவற்றில், 17 வடிப்பாலைகள் தனியார் துறையிலும் மற்றும் 2 வடிப்பாலைகள் கூட்டுறவுத் துறையிலும் இயங்கி வருகின்றன. இவற்றின் விவரங்கள் **இணைப்பு – 3–**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3.9 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் தயாரிப்பதற்கு மூலப்பொருளாக சாராவி பயன்படுத்தப்படுகிறது. மேலும், கல்வி நிறுவனங்கள், பரிசோதனைக் கூடங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் சாராவி குறைந்த அளவில் பயன்படுத்தப்படுகின்றது. இயல்பு மாற்றப்பட்ட சாராவி, பெயின்ட் மற்றும் வார்னிஷ் தொழிற்சாலைகளில் கரைப்பானாக (Solvent) பயன்படுத்தப்படுகிறது.

## தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி (Grain based ENA)

**3.10** தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி உயர்தர இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது தமிழகத்தில் தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி தயாரிக்கும் வடிப்பாலை எதுவும் இல்லை. எனவே, அரசின் முன் அனுமதி பெற்று தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி பிற மாநிலங்களிலிருந்து இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானத் தயாரிப்பாளர்களால் இறக்குமதி செய்யப்படுகிறது.

## எத்தனால் (Ethanol)

**3.11** எத்தனால், பெட்ரோலிய எரிபொருள்களைப்போல அல்லாமல் தாவரங்களிலிருந்து முதன்மையாக கிடைக்கக்கூடிய ஒருவகை எரிபொருளாகும். அது பசுமை எதிர்விளை வாயுக்கசிவின் வெளிப்படுதலை வெகுவாக குறைத்து, மாசு இடர்கள் ஏற்படாமல் சுற்றுச்சூழலை பாதுகாக்கிறது. கச்சா எண்ணெய் இறக்குமதியினைக் குறைத்து அந்நியச் செலாவணியை சேமிப்பதற்கும் எத்தனால் உதவுகிறது. இத்தகைய நன்மைகளை கருத்தில் கொண்டு, எத்தனாலை உற்பத்தி செய்து பெட்ரோலுடன் கலந்து எண்ணெய் நிறுவனங்கள் பயன்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு அரசால் கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டு **01.01.2003** முதல்

நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இருப்பினும், **13.12.2006** முதல் எத்தனால் உற்பத்தி நிறுத்தப்பட்டது. அரசு ஆணை (நிலை) எண். 12, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (2) துறை, நாள் **26.03.2012**–ன்படி மீண்டும் எத்தனால் தயாரிக்க அனுமதி அளிக்கப்பட்டு, அதனடிப்படையில் 8 வடிப்பாலைகளுக்கு உரிமம் உள்ளன. இவற்றின் விவரங்கள் **இணைப்பு – 4**–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**3.12** மேலும், **4.5** கோடி லிட்டர் எத்தனால் உற்பத்தி செய்து வழங்க ஏதுவாக மேற்கண்ட வடிப்பாலைகளுக்கு **27.02.2013** முதல் **28.02.2014** வரை **1.5** இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வடிப்பாலைகள் **31.03.2014** வரை **0.71** இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை பயன்படுத்தி **1,58,89,289** லிட்டர் எத்தனாலை தயாரித்து எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளன. எத்தனால் உற்பத்தியால் கிடைத்த கூடுதல் வருவாயினால் சர்க்கரை ஆலைகளும், கரும்பு விவசாயிகளும் பயனடைந்தனர். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரின் **11.09.2015** நாளிட்ட செயல்முறை ஆணையில், **8** வடிப்பாலைகள் **01.09.2015** முதல் **31.03.2016** வரையிலான காலத்தில் **17,000** மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு பயன்படுத்தியும் மற்றும் **10,00,000** பல்க் லிட்டர்

தெளிவில்லா சாராவியினை (Impure Spirit) மாற்றம் செய்தும், 50 இலட்சம் லிட்டர் எத்தனால் தயாரித்து எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. 2015–2016–ஆம் ஆண்டில், 38.109 இலட்சம் லிட்டர் எத்தனாலை எண்ணெய் நிறுவனங்களுக்கு வடிப்பாலைகள் வழங்கியுள்ளன.

## இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்கள்

**3.13** தமிழ்நாட்டில் பதினொன்று இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்களும், ஏழு பீர் தயாரிக்கும் நிறுவனங்களும் மற்றும் ஒரு ஒயின் தயாரிக்கும் நிறுவனமும் இயங்கி வருகின்றன. இவற்றின் விவரங்கள் **இணைப்பு – 5–ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

## பீர் ஏற்றுமதி

**3.14** அரசாணை (நிலை) எண்கள்.20 மற்றும் 21, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (3) துறை, நாள் 21.07.2015–ல், முறையே, பீர் ஏற்றுமதிக்கு ஆயத்தீர்வை செலுத்துவதிலிருந்து விலக்களித்தும், ஏற்றுமதி கட்டணம் மற்றும் ஏற்றுமதி உரிமக் கட்டணம் ஆகியவற்றை மாற்றியமைக்க விதித்திருத்தங்கள் செய்தும் அரசு ஆணையிட்டுள்ளது. 2015–2016–ஆம் ஆண்டில்

வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பீரின் அளவு **1,15,000** பெட்டிகள் ஆகும்.

## அயல்நாட்டு மதுபானங்கள் இறக்குமதி

**3.15** அயல்நாட்டு சுற்றுலா பயணிகள், நட்சத்திர அந்தஸ்து பெற்ற உணவு விடுதிகள் மற்றும் மனமகிழ் மன்றங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, அயல்நாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்வதற்கு, உரிய சிறப்புக் கட்டணம் செலுத்திய பின்னர் அனுமதி ஆணைகள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அவர்களால் வழங்கப்படுகிறது. அயல் நாட்டு மதுபான வகைகளின் இறக்குமதியை முறைப்படுத்த **02.03.2012** முதல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் வழிப்படுத்தும் முகவராக நியமிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்ய செலுத்தப்படும் சிறப்புக் கட்டணத் தொகையில் **3**% சேவைக் கட்டணமாக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் வசூலிக்கப்படுகிறது. சிறப்புக் கட்டணம் தவிர அயல்நாட்டு மதுபான விற்பனை மீது **58**% மதிப்புக் கூட்டு வரியும் விதிக்கப்படுகிறது. ஏப்ரல் **2015** முதல் மார்ச் **2016** வரை சேவைக் கட்டணம் மூலமாக ரூ.**17.76** இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள் நேரடியாக வாங்கப்பட்டு, உள்ளூர்

விற்பனைக்காக பெரு  வணிக வளாகங்களில் உள்ள சில்லறை விற்பனை கடைகள் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது.

**3.16** அயல்நாட்டு மதுபானங்களின் சிறப்புக் கட்டணம் மூலமாக கிடைக்கப்பெற்ற வருவாய் பின்வருமாறு:-

| **வ. எண்.** | **நிதியாண்டு** | **சிறப்புக் கட்டணம் (ரூபாய் கோடியில்)** |
|---|---|---|
| 1 | 2010 – 2011 | 1.86 |
| 2 | 2011 – 2012 | 1.96 |
| 3 | 2012 – 2013 | 2.70 |
| 4 | 2013 – 2014 | 3.30 |
| 5 | 2014 – 2015 | 7.39 |
| 6 | 2015 – 2016 | 7.74 |

**மாநில ஆய வில்லைகள்**

**3.17** கள்ள மற்றும் போலி மதுபானங்களின் நடமாட்டம் மற்றும் விற்பனையைத் தடுக்கும் பொருட்டு, **2003**–ஆம் ஆண்டு முதல் அதிக பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய, செயற்கை இழை ஆயவில்லைகளை, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மூலம் விற்பனை செய்யப்படும் இந்தியத்

தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள், பீர் மற்றும் ஒயின் பாட்டில்கள் மீது ஒட்டி விற்பனை செய்யப்படும் நடைமுறையானது, அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது சராசரியாக மாதத்திற்கு **21.85** கோடி ஆயவில்லைகள் தேவைப்படுகிறது. **2015–2016–**ஆம் ஆண்டில், ஆயவில்லைகள் விற்பனை மூலம் ரூ.**19.23** கோடி வருவாய் கிடைத்துள்ளது.

## 4. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

**4.1** கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கொண்டு செல்லுதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தலை ஒழிப்பதற்காகவும், அண்டை மாநிலங்களிலிருந்து போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் கடத்தி வரப்படுவதைத் தடுப்பதையும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

**4.2** கூடுதல் காவல் துறை இயக்குநர் (அமலாக்கம்) இப்பிரிவின் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக சென்னையில் மத்திய புலன் விசாரணைப் பிரிவில் காவல் கண்காணிப்பாளர் ஒருவரும், சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய மண்டலங்களில் மூன்று காவல் கண்காணிப்பாளர்களும் (அமலாக்கம்) பணியாற்றுகின்றனர். மத்திய புலன் விசாரணைப்

பிரிவில் காவல் கண்காணிப்பாளருக்கு உதவியாக 2 துணை காவல் கண்காணிப்பாளர்களும், 6 காவல் ஆய்வாளர்களும், 8 காவல் சார்பு ஆய்வாளர்களும், ஒரு தலைமைக் காவலரும் மற்றும் மூன்று இரண்டாம் நிலை காவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

4.3 மாநிலத்தில் தொண்ணூற்று ஆறு அமலாக்கப் பிரிவுகள் இயங்குகின்றன. காவல் ஆய்வாளர்களின் தலைமையில் இயங்கும் இந்தப் பிரிவுகள் அனைத்தும் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1937–ஐ அமல்படுத்துவதற்காக காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மாவட்டங்கள்/ நகரங்களில் உள்ள துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. மதுவிலக்கை அமல்படுத்துவதில் முதன்மைப் பொறுப்புடைய மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆணையர்களின் நிர்வாக மற்றும் செயல்பாட்டு கட்டுப்பாட்டின்கீழ் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் மற்றும் அதனைச் சார்ந்த அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்.

## சோதனைச் சாவடிகள்

4.4 அண்டை மாநிலங்களிலிருந்து போலி/தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், எரிசாராயம் மற்றும் சாராய உறைகள் ஆகியவை தமிழ்நாட்டுக்குள் கள்ளத்தனமாக ஊடுருவதைத் தடுப்பதற்காக நாகப்பட்டினம் (5), கன்னியாகுமரி (1), தேனி (1), திருவள்ளூர் (5), வேலூர் (5), கடலூர் (4), விழுப்புரம் (9), கிருஷ்ணகிரி (7), ஈரோடு (1), சேலம் (2), நீலகிரி (1), திருவாரூர் (1), திருப்பூர் (1), கோயம்புத்தூர் (1) ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் சென்னை மாநகரிலும் (1) ஆகமொத்தம் 45 மதுவிலக்கு சோதனைச் சாவடிகள் உள்ளன. இது தவிர நாகப்பட்டினம் (2), கடலூர், விழுப்புரம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 7 நடமாடும் சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. அரசாணை (நிலை) எண்.5, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (7) துறை, நாள் 21.04.2015–ல், வாகன சோதனையை கண்காணிப்பதற்காக ஐந்து அமலாக்க சோதனைச் சாவடிகளுக்கு இணைய வசதியுடன் கூடிய உட்சுற்று தொலைக்காட்சி இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகளும் மற்றும் கூடுதல் காவல் துறை இயக்குநர் (அமலாக்கம்), சென்னை அலுவலகத்தில் கண்காணிப்புக்காக

ஒரு மூலக் கணினி (CMS)–ம் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## திடீர் வாகனத் தணிக்கை

4.5 தெளிந்த சாராவி என்பது செறிவு மிகுந்த ஆல்கஹால் ஆகும். பொதுவாக இது ஆயத்தீர்வை செலுத்தப்படாத மலிவு விலை மதுபானமாக விற்பனை செய்வதற்கு கடத்தப்படுகிறது. அநேக சமயங்களில் இத்தகைய சாராயத்தினால் கள்ளச் சாராய இறப்புகள் நிகழ்கின்றன. மாநிலம் முழுவதும் மத்திய புலன் விசாரணைப் பிரிவு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளின் மூலம் சேகரிக்கப்படும் நுண்ணறிவு தகவல்களின் அடிப்படையில் திடீர் வாகனச் சோதனைகள் முறைப்படி நடத்தப்பட்டு வருகின்றன. 01.04.2015 முதல் 30.06.2016 வரையிலான காலத்தில், இத்திடீர் வாகனச் சோதனைகளின் மூலம் 52 எரிசாராயக் கடத்தல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1 டிராக்டர், 1 மினி லாரி, 1 ஈப்பு, 1 மினி வேன், 5 வேன்கள், 13 கார்கள், 1 ஆட்டோ மற்றும் 46 இருசக்கர வாகனங்கள் உட்பட மொத்தம் 69 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

## இரகசிய தகவலாளர்களுக்கு வெகுமதிகள்

**4.6** அரசு கடிதம் (டி) எண். **61**, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் **(6)** துறை, நாள் **04.03.2016**–ல் எரிசாராயம் கடத்துதல் பற்றி மதுவிலக்கு அமலாக்க அலுவலர்களுக்கு தகவல்கள் தரும் தகவலாளர்களுக்கு வெகுமதிகள் வழங்குவதற்காக **2015–2016**–ஆம் நிதியாண்டிற்கு, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் தனது சொந்த நிதியிலிருந்து ரூ.**15.00** இலட்சம் ஒப்பளிப்பு செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. இத்தகவலாளர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மூலம் வெகுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## மதுவிலக்கு உதவி மையம் – 10581

**4.7** மதுவிலக்கு உதவி மையத்திற்காக கட்டணமில்லா தொலைபேசி எண்.**10581** ஒன்று ஏற்படுத்த அரசால் அனுமதிக்கப்பட்டு அது மதுவிலக்கு தலைமையக மத்திய புலன்விசாரணைப் பிரிவு கட்டுப்பாட்டு அறையில் நிறுவப்பட்டுள்ளது. கள்ளச் சாராயம் காய்ச்சுதல், எரிசாராயம் கடத்துதல், போலி மதுபானம், கள்ளச் சாராயம் விற்பனை ஆகிய மதுவிலக்குக் குற்றங்கள் தொடர்பாக பொது மக்கள் மற்றும் தகவலாளர்கள் இலவசமாக தகவல் அளிப்பதற்கு ஏதுவாக இருப்பது இச்சேவை மையத்தின் நோக்கமாகும். இந்தக்

கட்டணமில்லா சேவை மையம் 24 மணிநேரமும் மத்திய புலன் விசாரணைப் பிரிவு கட்டுப்பாட்டு அறையில் செயல்படுகிறது. 24.07.2013 முதல் மேற்கண்ட கட்டணமில்லா எண் செயல்பட்டு வருகிறது. 01.04.2015 முதல் 30.06.2016 வரையிலான காலத்தில் 3514 புகார்கள் பெறப்பட்டு அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள் மற்றும் சாதனைகள்

4.8 01.04.2015 முதல் 30.06.2016 வரையில், ரூ.2.06 கோடி மதிப்புள்ள 5.15 இலட்சம் லிட்டர் கள்ளச்சாராயம், ரூ.1.06 கோடி மதிப்புள்ள 1.06 இலட்சம் லிட்டர் எரி சாராயம், ரூ.16.58 கோடி மதிப்புள்ள பிற மாநிலங்களில் இருந்து கடத்தி வரப்பட்ட 16.58 இலட்சம் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான பாட்டில்கள் மற்றும் ரூ.87.92 இலட்சம் மதிப்புள்ள மற்ற மதுபான வகைகள் ஆகியவை கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. மதுவிலக்கு குற்றங்களில் பயன்படுத்தப்பட்ட 3953 மோட்டார் வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. திருவள்ளூர் (1), வேலூர் (2), விழுப்புரம் (1), திருவண்ணாமலை (2), திருச்சிராப்பள்ளி (2), நாகப்பட்டினம் (1), திண்டுக்கல் (2), திருநெல்வேலி (1), தூத்துக்குடி (1), மற்றும் ஈரோடு (1) மாவட்டங்கள், திருநெல்வேலி நகரம் (1) மற்றும் பெருநகர சென்னை தெற்கு (1) ஆகிய

இடங்களில் 16 போலி மதுபான உற்பத்திக் கூடங்கள் அழிக்கப்பட்டன.

## கள்ளச்சாராய இறப்பு சம்பவங்களைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்

4.9 கள்ளச்சாராய இறப்புக்கான முக்கிய காரணமாக இருந்த “மெத்தனால்” 2002–ஆம் ஆண்டில், 1937–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் வரம்புக்குள் கொண்டு வரப்பட்டது. மேலும், மெத்தனால் வைத்திருத்தல், பயன்படுத்துதல், எடுத்துச் செல்லுதல், இறக்குமதி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்றவற்றைக் கடுமையாகக் கட்டுப்படுத்திடவும், 2002–ஆம் ஆண்டில், 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகளில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டன. மாநிலத்தில், மெத்தனால் பயன்படுத்த மற்றும் வைத்திருக்க உரிமம் பெற்ற தொழிற்சாலைகளைச் சோதனையிட, மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவர்களால் அனுப்பப்படும் மாதாந்திர அறிக்கை அமலாக்க தலைமையிடத்தில் ஆய்வு செய்யப்படுகிறது.

**4.10** இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளால், **2011** முதல் கள்ளச்சாராய இறப்புகள் ஏதுமில்லை.

## கள்ளச்சாராயத்தினால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து விழிப்புணர்வு

**4.11** சாராயம் அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொது மக்களிடையே மாநிலம் தழுவிய விழிப்புணர்வு ஏற்படுத்த, முதன் முதலில் **2003–2004**–ஆம் ஆண்டில் ரூ.**10.00** இலட்சமும், **2004–2005**–ஆம் ஆண்டில் ரூ.**30.00** இலட்சமும் அரசால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது. ஏழு ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் **2011–2012, 2012–2013, 2013–2014** மற்றும் **2014–2015**–ஆம் ஆண்டுகளில் இதுபோன்ற விழிப்புணர்வு முகாம்கள் நடத்த அரசால் தலா ரூ.**1.00** கோடி நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது.

**4.12** **2015–2016**–ஆம் ஆண்டில், அரசாணை (நிலை) எண்.**33**, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (7) துறை, நாள் **30.11.2015**–ன்படி, விழிப்புணர்வு முகாம்கள் நடத்த அரசால் ரூ.**1.00** கோடியிலிருந்து ரூ.**3.00** கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இந்த, ரூ.**3.00** கோடியில், **32** மாவட்டங்களுக்கு ரூ.**2,75,00,000/**–மும் (தலா ரூ.**8,59,375** வீதம்), கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி

மற்றும் மதுரை ஆகிய ஐந்து காவல் ஆணையரகங்களுக்கு ரூ.20.00 இலட்சமும் (தலா ரூ.4.00 இலட்சம் வீதம்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கூடுதல் காவல் துறை இயக்குநர், அமலாக்கம் அவர்களுக்கு ரூ.5.00 இலட்சமும் இத்தகைய விழிப்புணர்வு முகாம்கள் நடத்திட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும், விழிப்புணர்வு முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

## மனந்திருந்திய மதுவிலக்கு குற்றவாளிகளுக்கான மறுவாழ்வு நிதி

4.13 மாநிலம் முழுவதும் கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்ட குற்றவாளிகளின் மறுவாழ்விற்காக, 2003–2004–ஆம் ஆண்டில் முதன் முதலாக அரசு கடனுதவி வழங்கியது.

4.14 2011–2012–ஆம் ஆண்டில் கடனாக வழங்கப்பட்ட மறுவாழ்வு நிதி ரூ.2.20 கோடியிலிருந்து ரூ.5.00 கோடியாக உயர்த்தப்பட்டதோடு மானியமாகவும் மாற்றப்பட்டது. இதேபோன்று, 2012–2013, 2013–2014 மற்றும் 2014–2015–ஆம் ஆண்டுகளில் ரூ.5.00 கோடி மறுவாழ்விற்காக மானியமாக வழங்கப்பட்டது.

**4.15** அரசாணை (நிலை) எண்.**34**, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (**7**) துறை, நாள் **15.12.2015**–ன்படி, இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களை கள்ளத்தனமாகக் கடத்துதல், விற்பனை செய்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாக விற்பனை செய்தல், தெளிந்த சாராவி கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்கு சிறைத் தண்டனை பெற்று விடுதலையாகி திருந்துபவர்களின் பொருளாதார மறுவாழ்வுக்காக **2015–2016**–ஆம் ஆண்டிற்கு ரூ.**5.00** கோடி அரசால் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**4.16** மதுவிலக்கு குற்றவாளிகளின் பொருளாதார மறுவாழ்விற்காக வழங்கப்படும் மானியத் தொகையை பகிர்ந்தளிப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் முதுநிலை மண்டல மேலாளர் மற்றும் உதவி ஆணையர் (ஆயத்தீர்வை) ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட மறுவாழ்வு குழு அமைக்கப்பட்டுள்ளது.

**4.17** மதுவிலக்கு குற்றவாளிகளின் மறுவாழ்விற்காக, வெவ்வேறு திட்டங்களான கறவை மாடு விநியோகித்தல், ஆடுகள் வளர்த்தல், காய்கறி, பூ, பழங்கள், மீன் போன்ற சிறுவியாபாரம் செய்வதற்கு கைவண்டிகள் வழங்குதல், தேன் சேகரிப்பு அலகுகள் மற்றும் புளி பதனிடும் அலகுகள் நிறுவுதல், சிற்றுண்டி மற்றும் தின்பண்டங்கள் தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றிற்காக நிதி உதவி வழங்கப்படுகின்றது. **2015–2016**–ஆம் ஆண்டில், **1666** பயனாளிகள் பயன் பெறுவர் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## தடுப்புக்காவல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1982)

**4.18** மாநிலத்தில் பொது ஒழுங்கு சீர்குலைவதற்கு மூலகாரணம் கள்ளச்சாராயக்காரர்கள், கணினிவெளிச் சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசைப்பகுதி நில ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் காணொலித் திருடர்கள் போன்றவர்களின் அபாயகரமான நடவடிக்கைகள் ஆகும். **1982**–ஆம் ஆண்டில், இந்தக் குற்றவாளிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வழிவகை செய்யும் தமிழ்நாடு சட்டம் **14/1982** இயற்றப்பட்டது.

**4.19** இச்சட்டத்தின்படி, மேற்கூறிய குற்றவாளிகள் ஓராண்டு வரை தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்றனர். **01.04.2015** முதல் **30.06.2016** வரையில் மதுவிலக்கு குற்றங்களில் தொடர்ந்து ஈடுபட்ட **342** மதுவிலக்கு குற்றவாளிகள் இச்சட்டத்தின்கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## 5. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

**5.1** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) **23.05.1983** அன்று கம்பெனிகள் சட்டம், **1956–ன்** கீழ் அமைக்கப்பட்ட நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது வகைகள் மற்றும் சாராயத்தை தமிழ்நாட்டில் மொத்த விற்பனை விநியோகம் செய்யும் உரிமையை தனியாரிடமிருந்து கையகப்படுத்தியது.

**5.2** தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், **1937**, (தமிழ்நாடு சட்டம் X/1937) பிரிவு **17–C (1–A)** (a)–ன் படி தமிழ்நாடு முழுவதும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது வகைகளை மொத்தவிற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது மற்றும் மதுபான மொத்த விநியோகத்தை இந்நிறுவனம் **23.05.1983** முதல் செய்து வருகிறது. தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், **1937**,

பிரிவு 17–C (1-B) (a)–ன் படி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளை சில்லறை விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது மற்றும் டாஸ்மாக் நிறுவனம் **29.11.2003** முதல் மதுபானச் சில்லறை விற்பனையை ஏற்று நடத்தி வருகிறது. மேலும், இந்நிறுவனம் இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மது, பீர் மற்றும் ஒயின் வகைகளையும் விற்பனை செய்து வருகிறது.

## இயக்குநர் குழுமம்

**5.3** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் இயக்குநர் குழுமம் நிறுவனத்தின் செயல்பாடுகளை இயக்கவும், கட்டுப்படுத்தவும் செய்கிறது. மாண்புமிகு அமைச்சர் (மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை) அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவர் ஆவார். அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை, அரசு முதன்மைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியோர் இயக்குநர் குழுமத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

**5.4** இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.**15.00** கோடி ஆகும். மொத்த பங்கு மூலதனமும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**தலைமை அலுவலகம்**

**5.5** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. இந்நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் மேலாண்மை இயக்குநருக்கு உதவியாக முதன்மை பொது மேலாளர் (நிதி) மற்றும் நிறுவனச் செயலர், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் பொது மேலாளர் (மொத்த விற்பனை மற்றும் நிர்வாகம்), பொது மேலாளர் (சில்லறை விற்பனை) மற்றும் தொழிலாளர் துணை ஆணையர் நிலையில் பொது மேலாளர் (பணியாளர் நலன்) மற்றும் பிற அலுவலர்கள் பணிபுரிகிறார்கள்.

**மண்டல அலுவலகங்கள், மாவட்ட மேலாளர் அலுவலகங்கள், மதுபானக் கிடங்குகள், கடைகள் மற்றும் மதுக்கூடங்கள்**

**5.6** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு, மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள முதுநிலை மண்டல மேலாளர்கள் தலைமையில் **5** மண்டல அலுவலகங்கள் உள்ளன. இவ்வலுவலகங்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

**5.7 30.06.2016—**ல், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு **38** மாவட்ட மேலாளர் அலுவலகங்களும், **43** இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கிடங்குகளும், **6,200** மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும் மற்றும் **3,139** சில்லறை விற்பனைக் கடைகளுடன் இணைந்த மதுக்கூடங்களும் உள்ளன. இந்த **43** மதுபானக் கிடங்குகளில் **29** மதுபானக் கிடங்குகள் இந்நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்குகின்றன.

## சில்லறை விற்பனைப் பணியாளர்கள்

**5.8 30.06.2016—**ல், சில்லறை விற்பனைக் கடைகளில் ஒப்பந்த/தொகுப்பூதிய அடிப்படையில் **7,204** கடை மேற்பார்வையாளர்களும், **15,677** விற்பனையாளர்களும் மற்றும் **3,753** உதவி விற்பனையாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

## சில்லறை விற்பனைப் பிரிவு பணியாளர் நலத்திட்டங்கள்

**5.9** சில்லறை விற்பனைப் பணியாளர்களுக்கு மாதத் தொகுப்பூதியத்துடன் ஒவ்வொரு ஆண்டும் **20** சதவீதம் போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணியாளர்களின் நலனுக்காக பல்வேறு மருத்துவத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம் (EPF Scheme), தொழிலாளர்

வைப்புநிதியுடன் இணைந்த காப்புறுதித் திட்டம் (EDLI Scheme), பணிக்கொடை (Gratuity), குடும்ப சேம நல நிதித் திட்டம் (Family Benefit Fund Scheme), காப்புத் தொகையின் மீதான வட்டி (Interest on Security Deposit) ஆகிய திட்டங்கள் சில்லறை விற்பனைப் பணியாளர்களின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**பணியாளர்களை மீள பணியமர்த்தல்**

**5.10** **19.06.2016** முதல் மூடப்பட்ட **500** சில்லறை விற்பனைக் கடைகளில் பணிபுரிந்த பணியாளர்கள் இந்நிறுவனத்தில் தகுந்த பணியிடங்களில் மீள பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். மேலும், எந்தப் பணியாளருக்கும் பணியிழப்பு ஏற்படவில்லை.

**மதுபான வகைகள் கொள்முதல்**

**5.11** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மாநிலத்தில் இயங்கி வருகின்ற **11** இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், 7 பீர் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் 1 ஒயின் தயாரிக்கும் நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது, பீர் மற்றும் ஒயின் வகைகளைக் கொள்முதல் செய்து வருகிறது.

## பற்றுச்சீட்டு இயந்திரங்கள்

**5.12** பற்றுச்சீட்டுகளில் கையினால் எழுதும்போது ஏற்படும் தாமதம் மற்றும் தவறுகளைத் தவிர்க்கவும் மற்றும் சில்லறை விற்பனைக் கணக்குகள் மற்றும் சரக்கு இருப்பு விவரங்களைச் சுலபமாகப் பராமரிப்பதற்காகவும், பற்றுச்சீட்டு இயந்திரங்கள் சென்னை மண்டலம், திருச்சி, கோயம்புத்தூர் (வடக்கு), கோயம்புத்தூர் (தெற்கு), மதுரை (வடக்கு), மதுரை (தெற்கு) மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள **2204** மதுபானக் கடைகளில் இயங்கி வருகின்றன.

## மதுவிற்பனை இல்லாத நாட்கள்

**5.13** **03.01.2012** முதல் மது விற்பனை இல்லாத நாட்கள் **5**–லிருந்து **8**–ஆக உயர்த்தப்பட்டு உள்ளன. அவை காந்தி ஜெயந்தி தினம், திருவள்ளுவர் தினம், மகாவீர் ஜெயந்தி தினம், நபிகள் நாயகம் பிறந்த நாள், வடலூர் இராமலிங்கர் நினைவு நாள், சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் மே தினம் ஆகியவை ஆகும். இது தவிர, முக்கிய நிகழ்வுகளின் நாட்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் உள்ளாட்சித் தேர்தல் தொடர்புடைய நாட்கள் ஆகியவையும் மது விற்பனையில்லாத நாட்களாக அவ்வப்போது அறிவிக்கப்படுகின்றன.

## அரசு வருவாய்

**5.14** மதுபான விற்பனை மூலம் அரசு ஈட்டிய வருவாய் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வரிசை எண் | ஆண்டு | ஆயத்தீர்வை வருவாய் | விற்பனை வரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | | |
| 1 | 2003–04 | 1657.10 | 1982.83 | 3639.93 |
| 2 | 2004–05 | 2549.00 | 2323.03 | 4872.03 |
| 3 | 2005–06 | 3176.65 | 2854.12 | 6030.77 |
| 4 | 2006–07 | 3986.41 | 3487.20 | 7473.61 |
| 5 | 2007–08 | 4764.05 | 4057.11 | 8821.16 |
| 6 | 2008–09 | 5755.42 | 4846.08 | 10601.50 |
| 7 | 2009–10 | 6740.59 | 5757.63 | 12498.22 |
| 8 | 2010–11 | 8115.90 | 6849.52 | 14965.42 |
| 9 | 2011–12 | 9956.06 | 8125.10 | 18081.16 |
| 10 | 2012–13 | 12125.31 | 9555.36 | 21680.67 |
| 11 | 2013–14(*) | 5034.82 | 16640.07 | 21674.89 |
| 12 | 2014–15(*) | 5731.18 | 18433.77 | 24164.95 |
| 13 | 2015–16(*) | 5836.01 | 20009.57 | 25845.58 |

**(*)** ஆயத்தீர்வை வருவாய் குறைவாகவும், விற்பனை வரி அதிகமாகவும் இருப்பது வரி விதிப்பு முறைகளில் செய்யப்பட்ட சில மாற்றங்களினால் ஆகும்.

## 6. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு

**6.1** போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவானது (குற்றப் புலனாய்வு துறை) சென்னையில் 17.12.1963 அன்று ஏற்படுத்தப்பட்டது. 1987, 1990, 1994, 1995 மற்றும் 2004–ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அரசு ஆணைகளின்படி திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திண்டுக்கல், தேனி, விழுப்புரம், இராமநாதபுரம், கோயம்புத்தூர், தூத்துக்குடி, வேலூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலகுகள் தொடங்கப்பட்டுள்ளன. தற்போது மொத்தம் 15 போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலகுகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இயங்கி வருகின்றன. போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களைத் தயாரித்தல், பயன்படுத்துதல், கடத்துதல் ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் பற்றிய நுண்ணறிவு தகவல்களைச் சேகரித்தல் மற்றும் இந்த குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வது ஆகியவை இப்பிரிவின் முக்கிய பணிகள் ஆகும்.

## நிர்வாக அமைப்பு

**6.2** உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் கீழ் இயங்கும் போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவானது காவல்துறை கூடுதல் இயக்குநர், குற்றம் அவர்களின் தலைமையில் ஒரு காவல்துறை தலைவர் (Anti Narcotic Task Force), 1 காவல் கண்காணிப்பாளர், 1 கூடுதல் காவல் கண்காணிப்பாளர், 12 துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், 16 காவல் ஆய்வாளர்கள், 17 உதவி காவல் ஆய்வாளர்கள் மற்றும் 126 இதர நிலை பணியாளர்கள் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகிறது.

## மத்திய போதைப் பொருள் பிரிவுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்

**6.3** மத்திய அரசின் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டம், 1985–ஆம் ஆண்டில் இயற்றப்பட்டு அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு, மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ள போதைப் பொருள் தடுப்புப் பிரிவுடன் இணைந்து பணியாற்றுகிறது. மத்திய போதைப் பொருள் தடுப்புப் பிரிவானது, மாநில போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவின் அலுவலர்களுக்கு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் குறித்த சிறப்பு

பயிற்சிகளை அளிக்கிறது. இப்பயிற்சியானது போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவின் செயல்பாட்டை மேம்படுத்துகிறது.

## 6.4 போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டம், 1985 பற்றிய முக்கிய விவரங்கள்

- எந்த ஒரு நபரும் கோகோ தாவரத்தைப் பயிரிடவோ அல்லது அதன் யாதொரு பகுதியையும் சேகரித்து வைத்திருக்கவோ கூடாது.

- எந்த ஒரு நபரும், பாப்பி அல்லது கஞ்சா செடியினை பயிரிடக் கூடாது.

- மருத்துவம் மற்றும் அறிவியல் காரணங்களுக்காக கோகோ, பாப்பி அல்லது கஞ்சா செடியினை மத்திய அரசின் அனுமதியுடன்தான் பயிரிடவேண்டும்.

- எந்த ஒரு நபரும் போதை மருந்து அல்லது மனமயக்கப் பொருட்கள் எதையும் தயாரிக்கவோ, உற்பத்தி செய்யவோ, கைவசம் வைத்திருக்கவோ, விற்கவோ, வாங்கவோ, கொண்டுசெல்லவோ, பயன்படுத்தவோ, ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யவோ கூடாது.

- இச்சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றவாளி எந்த ஒரு சொத்தையும் வாங்கி இருந்தாலோ அல்லது பெற்றிருந்தாலோ அல்லது பயன்படுத்தியிருந்தாலோ, புலனாய்வு அதிகாரி நம்பத்தகுந்த காரணங்களின் அடிப்படையில் அவற்றை பறிமுதல் செய்ய ஆணை பிறப்பிக்கலாம். புலனாய்வு அதிகாரி அல்லது தகுதி வாய்ந்த அதிகார அமைப்பின் முன்அனுமதியின்றி அத்தகைய சொத்தின் உரிமையாளர் அதனை விற்கவோ அல்லது மாற்றம் செய்யவோ அல்லது வேறு காரணங்களுக்காக பயன்படுத்தவோ கூடாது.

## 6.5 போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டம், 1985–ல் கூறப்பட்டுள்ள தண்டனை விவரங்கள்

- 1 கிலோ வரை கஞ்சா அல்லது 5 கிராம் வரை ஹெராயின் (குறைந்த அளவு) வைத்திருந்தால் ஒரு வருட காலம் வரை சிறைத்தண்டனை அல்லது ரூ.10,000/– அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

- 1 கிலோ முதல் 20 கிலோ வரை கஞ்சா அல்லது 6 முதல் 250 கிராம் வரை ஹெராயின் (நடுத்தர அளவு)

வைத்திருந்தால் 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் ரூ.1 இலட்சம் அபராதம் விதிக்கப்படலாம்.

- 20 கிலோவிற்கு மேல் கஞ்சா அல்லது 250 கிராமிற்கு மேல் ஹெராயின் (வணிக அளவு) வைத்திருந்தால் 10 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் ரூ.1 இலட்சம் முதல் ரூ.2 இலட்சம் வரை அபராதம் விதிக்கப்படலாம்.

- இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படக் கூடிய குற்றங்களில் தொடர்ந்து ஈடுபட்டால் அதிகபட்ச சிறைத்தண்டனையின் ஒன்றரை மடங்கு வரை நீட்டிக்கத்தக்க கடுங்காவல் சிறைத்தண்டனை மற்றும் அதிகபட்ச தண்டத் தொகையில் ஒன்றரை மடங்கு வரை நீட்டிக்கத்தக்க தண்டமும் விதித்து தண்டிக்கப்படத் தக்கவராவார்.

- எவரேனும் இச்சட்டத்தின் கீழ் தொடர்ந்து தண்டிக்கப்படக் கூடிய குற்றங்கள் செய்திருந்தாலோ அல்லது செய்ய முயன்றாலோ அல்லது குற்றமுறு சதியில் ஈடுபட்டு இருந்திருந்தாலோ மற்றும் தொடர்ந்து வணிக அளவிற்கு போதை மருந்துகள்

அல்லது மனமயக்கப் பொருட்களை வைத்திருந்தாலோ மற்றும் மேற்படி சட்ட விரோத செயல்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிதியுதவி செய்திருந்தாலோ, அவர் மரண தண்டனை விதித்து தண்டிக்கப்படத் தக்கவராவார்.

## போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்பு சட்டம், 1988

**6.6** 1988–ஆம் ஆண்டின் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 46/1988) மத்திய அரசால் இயற்றப்பட்டு 01.07.1988 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களை கள்ளத்தனமாக கடத்தும் நபர்களை காவலில் வைக்க, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் ஒரு ஆண்டும் அதிகபட்சமாக இரண்டு ஆண்டுகளும் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகளை தடுப்புக் காவலில் வைக்கலாம்.

## போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களின் பயன்பாட்டை தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

**6.7** 2015–2016–ஆம் ஆண்டில், போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு 1890 வழக்குகளைக் கண்டுபிடித்து

1963 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு 3,481.380 கிலோ உலர் கஞ்சா, 2.050 கிலோ மெத்குலோன், 500 கிராம் ஹெராயின், 1.950 கிலோ கொகெயின் மற்றும் 850 கிராம் ஆம்பிடாமின் மற்றும் 75.250 கிலோ கஞ்சா செடிகள் ஆகிய போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதன் மொத்த மதிப்பு ரூ.13.99 கோடி ஆகும். மேலும், 2015–2016–ஆம் ஆண்டில், 30 மருந்து சரக்கு குற்றவாளிகள் தமிழ்நாடு தடுப்புக் காவல் சட்டம் 14/1982–ன் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

## சர்வதேச போதைப் பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தல் தடுப்பு நாள்

6.8 2016–ஆம் ஆண்டு, தமிழகத்தில் ஜுன் மாதம் 26–ஆம் நாள் சர்வதேச போதைப் பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தல் தடுப்பு நாளாக உகந்த முறையில் அனுசரிக்கப்பட்டது. இந்நாள் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மற்றும் போதைப் பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தல் தடுப்புக்காக அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மக்களுக்கு தெரியப்படுத்தும் விதமாக இருந்தது. அனைத்து 15 போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலகுகள் அந்தந்த தலைமையிடத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தின. மாவட்ட ஆட்சியர்கள், மாநகர காவல் ஆணையாளர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள்,

மாணவர்கள், கல்வி நிறுவனங்கள், போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவு அலுவலர்கள், போதைப் பொருள் கட்டுப்பாட்டுத் துறை அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், இந்திய செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் பலரால் பொது மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் இந்நாள் அனுசரிக்கப்பட்டது.

## 6.9 2016–2017–ஆம் ஆண்டிற்கான நடவடிக்கை விவரங்கள்

(1) போதைப் பொருள் தடுப்பு சட்டத்தினை சிறப்பாக அமல்படுத்துவதற்கு, போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினருடன் ஒருங்கிணைந்து போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவின் அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல்.

(2) பிற அண்டை மாநிலங்களிலிருந்து போதைப் பொருட்களை அதிக அளவுகளில் கடத்தப்படுவதை தடுக்கும் பொருட்டு இரயில் நிலையங்கள் மற்றும் சோதனை சாவடிகளில் தீவிர போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.

(3) பச்சை கஞ்சாவை ஒழிப்பதற்கு தமிழ்நாடு முழுவதும் உள்ள மலை பிரதேசங்களில் அடிக்கடி தீவிர சோதனை மேற்கொள்ளுதல்.

(4) கஞ்சா செடிகள் பயிரிடுவதை தடுக்க வனத்துறையினருடன் ஒருங்கிணைந்து முயற்சிகள் எடுத்தல்.

(5) அனைத்து போதைப்பொருள் நுண்ணறிவு அலகுகளின் மூலம் போதைப்பொருள் கடத்துவோர் மீது தமிழ்நாடு சட்டம் 14/1982–ன்படி தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(6) பொது இடங்களில், அதுவும் குறிப்பாக கல்வி நிறுவனங்களை சுற்றி போதைப்பொருள் தொல்லை மற்றும் போதைப்பொருள் விற்பனை ஆகியவற்றை ஒழிப்பதற்கு, பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் மற்றும் பள்ளிகள், கல்லூரிகள் அருகில் உள்ள இடங்கள் போன்ற எல்லா பொது இடங்களிலும் அடிக்கடி சோதனை நடத்துவதன் வாயிலாக பெருமளவு முயற்சிகள் எடுக்கப்படுதல்.

(7) கூரியர் நிறுவனங்கள் நடவடிக்கையை பற்றிய நுண்ணறிவு தகவல்களை சேகரித்து நடவடிக்கை எடுத்தல்.

(8) மருந்து ஆய்வாளர்களுடன் இணைந்து பள்ளிக் கூடங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் உள்ள மருந்து கடைகளை சோதனை செய்தல்.

(9) போதைப் பொருட்கள் சம்மந்தமான குற்றங்களுக்கு எதிராக போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டம், 1985–ஐ தீவிரமாக அமல்படுத்த மற்ற துறையினருடன் ஒருங்கிணைந்து கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

## 7. முடிவுரை

அரசு, கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கள்ள மற்றும் போலி மதுவகைகளின் விற்பனை மற்றும் கடத்தல், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களின் விற்பனை ஆகியவற்றை தடுப்பதற்கு, உறுதியான மற்றும் கடுமையான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளும். மாநிலத்தின் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைக் கொள்கைகளை சீரிய முறையில் நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்யும் பொருட்டு, அமலாக்கப்பிரிவும் துரிதப்படுத்தப்படுகிறது. மது, போதைப் பொருட்களினால் ஏற்படும் தீமைகள் குறித்து நடத்தப்படும் தீவிர விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் மதுவிலக்கு குற்றவாளிகள், மது மற்றும் போதைக்கு அடிமையானவர்களுக்கான (addicts) மறுவாழ்வு திட்டங்கள் ஆகியவை மேலும் வலிமைப்படுத்தப்படும்.

**பி. தங்கமணி**

மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்

## இணைப்பு – 1

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் மற்றும் விதிகள்**

| | |
|---|---|
| 1 | தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1937 (தமிழ்நாடு சட்டம் X / 1937). |
| 2 | தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகள், 1958. |
| 3 | தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்சு பாலிஷ்) விதிகள், 1959. |
| 4 | தமிழ்நாடு தீர்வு செய்ய வேண்டிய பொருள் (தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் பறிமுதல் செய்யப்பட்டவை) விதிகள், 1979. |
| 5 | தமிழ்நாடு வடிப்பாலை விதிகள், 1981. |
| 6 | தமிழ்நாடு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் (உற்பத்தி) விதிகள், 1981. |
| 7 | தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகள், 1981. |
| 8 | தமிழ்நாடு மதுபானம் (இடமாற்றம் ) விதிகள், 1982. |
| 9 | தமிழ்நாடு மதுபானம் (மொத்த விற்பனையில் வழங்கல்) விதிகள், 1983. |
| 10 | தமிழ்நாடு மதுபானம் சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகள், 2003. |
| 11 | தமிழ்நாடு பீர் வடிப்பாலை விதிகள், 1983. |
| 12 | தமிழ்நாடு மதுவிலக்கு மேல்முறையீடு மற்றும் சீராய்வு விதிகள், 1983. |
| 13 | தமிழ்நாடு குளோரல் ஹைட்ரேட் விதிகள், 1984. |

| | |
|---|---|
| 14 | தமிழ்நாடு மாஸ் ஒயின் விதிகள், 1984. |
| 15 | தமிழ்நாடு சாராவி தயாரித்தல் (கட்டுப்பாடு ) விதிகள், 1984. |
| 16 | தமிழ்நாடு சாராவி தயாரித்தல் (மாநிலத்திற்குள் தொழிலும் மற்றும் வணிகம்) கட்டுப்பாடு விதிகள், 1985. |
| 17 | தமிழ்நாடு போதை மருந்துகள் விதிகள், 1985. |
| 18 | தமிழ்நாடு மதுபானம் (சொந்த பயன்பாட்டிற்கான உடைமை) விதிகள், 1996. |
| 19 | தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகள், 2000. |
| 20 | தமிழ்நாடு ஒயின் (உற்பத்தி ) விதிகள், 2006. |
| | **இத்துறையால் செயல்படுத்தப்படும் மத்திய அரசுச் சட்டங்கள்** |
| 1 | மருந்து மற்றும் ஒப்பனைப்பொருட்கள் (ஆயத்தீர்வை) சட்டம், 1955. |
| 2 | மருந்து மற்றும் ஒப்பனைப்பொருட்கள் (ஆயத்தீர்வை) விதிகள், 1956. |
| 3 | போதை மருந்துகள்– மன மயக்கப் பொருட்கள் சட்டம், 1985. |
| 4 | போதை மருந்துகள்– மன மயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம், 1988. |

# இணைப்பு – 2

## தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளின் கருப்பஞ்சாற்றுக் கசண்டு கொள்ளளவு மற்றும் உற்பத்தி பற்றிய விவரங்கள்

| வ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | அனுமதிக்கப் பட்ட கொள்ளவு (மெட்ரிக் டன்) | உற்பத்தி விபரம் (அக்டோபர் 2014 – செப்டம்பர் 2015) (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | **கூட்டுறவுத்துறை திருவாளர்கள்** | | |
| 1 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், திருப்பூர் மாவட்டம். | 11000 | 3209 |
| 2 | மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம் மாவட்டம். | 12000 | 9550 |
| 3 | திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், திருவள்ளூர் மாவட்டம். | 14000 | 11149 |
| 4 | தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், தருமபுரி மாவட்டம். | 15000 | 3794 |
| 5 | சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், தருமபுரி மாவட்டம். | 12000 | 6453 |
| 6 | நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், மதுரை மாவட்டம். | 17000 | 9683 |
| 7 | ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், வேலூர் மாவட்டம். | 7000 | 5428 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 8 | திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், வேலூர் மாவட்டம். | 10000 | 2898 |
| 9 | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், வேலூர் மாவட்டம். | 21000 | 8000 |
| 10 | செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், விழுப்புரம் மாவட்டம். | 16000 | 7707 |
| 11 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், அலகு –1, விழுப்புரம் மாவட்டம். | 15000 | 13745 |
| 12 | எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், கடலூர் மாவட்டம். | 12000 | 8236 |
| 13 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், அலகு –2, விழுப்புரம் மாவட்டம். | 12000 | 24649 |
| 14 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, நாமக்கல் மாவட்டம். | 19000 | 15160 |
| 15 | என்.பி.கே. ஆர்.ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை, நாகப்பட்டினம் மாவட்டம். | 18000 | 6101 |
| 16 | செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், திருவண்ணாமலை மாவட்டம். | 12000 | 10650 |
| | **மொத்தம்** | **223000** | **146412** |
| | **பொதுத்துறை திருவாளர்கள்** | | |
| 17 | மதுரா சுகர்ஸ், மதுரை மாவட்டம். (இயங்கவில்லை) | 6000 | 0 |
| 18 | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை லிமிடெட், தஞ்சாவூர் மாவட்டம். | 14000 | 13139 |
| 19 | பெரம்பலூர் சர்க்கரை ஆலை லிமிடெட், பெரம்பலூர் மாவட்டம். | 12000 | 11609 |
| | **மொத்தம்** | **32000** | **24748** |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | **தனியார் துறை**<br>**திருவாளர்கள்** | | |
| 20 | பத்மாதேவி சுகர்ஸ் லிமிடெட்,<br>காஞ்சிபுரம் மாவட்டம். | 9000 | 5365 |
| 21 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ்<br>லிமிடெட், அலகு – 1,<br>தேனி மாவட்டம். | 12000 | 6717 |
| 22 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ்<br>லிமிடெட், அலகு – 1,<br>திருநெல்வேலி மாவட்டம். | 12600 | 5806 |
| 23 | சக்தி சுகர்ஸ் லிமிடெட்,அலகு –1,<br>ஈரோடு மாவட்டம். | 19300 | 46980 |
| 24 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ்,<br>அலகு – 2, ஈரோடு மாவட்டம். | 18000 | 15235 |
| 25 | சக்தி சுகர்ஸ் லிமிடெட்,<br>அலகு – 2, சிவகங்கை மாவட்டம். | 12000 | 12607 |
| 26 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ்,<br>தஞ்சாவூர் மாவட்டம். | 24000 | 13527 |
| 27 | இ.ஐ.டி. பாரி ( இந்தியா ) லிமிடெட்,<br>கடலூர் மாவட்டம். | 18600 | 63749 |
| 28 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ்<br>லிமிடெட், அலகு –2,<br>விழுப்புரம் மாவட்டம். | 13000 | 42816 |
| 29 | பொன்னி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ்<br>லிமிடெட், நாமக்கல் மாவட்டம். | 12600 | 21062 |
| 30 | திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட்,<br>அலகு – 1, கடலூர் மாவட்டம். | 24000 | 10924 |
| 31 | திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட்,<br>அலகு – 2, தஞ்சாவூர் மாவட்டம். | 12000 | 14122 |
| 32 | இ.ஐ.டி. பாரி ( இந்தியா ) லிமிடெட்,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். | 11000 | 2250 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 33 | இ.ஐ.டி. பாரி ( இந்தியா ) லிமிடெட், கரூர் மாவட்டம். | 21000 | 20920 |
| 34 | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி மாவட்டம். | 12100 | 13177 |
| 35 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், அலகு – 2, திருவண்ணாமலை மாவட்டம். | 15000 | 23897 |
| 36 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ், கடலூர் மாவட்டம். | 38000 | 25111 |
| 37 | இ.ஐ.டி. பாரி ( இந்தியா ) லிமிடெட், புதுக்கோட்டை மாவட்டம். | 10000 | 21664 |
| 38 | அருணாசலம் சுகர்ஸ், திருவண்ணாமலை மாவட்டம். (இயங்கவில்லை) | 0 | 0 |
| 39 | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், அரியலூர் மாவட்டம். | 16000 | 18974 |
| 40 | சக்தி சுகர்ஸ் லிமிடெட், அலகு – 3, ஈரோடு மாவட்டம். | 10000 | 22494 |
| 41 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், அலகு – 3, விழுப்புரம் மாவட்டம். | 27000 | 30890 |
| 42 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், அலகு–3, விழுப்புரம் மாவட்டம். | 26000 | 21033 |
| 43 | தனலக்ஷ்மி ஸ்ரீனிவாசன் சுகர்ஸ் பிரைவேட் லிமிடெட், பெரம்பலூர் மாவட்டம். | 18000 | 25346 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 44 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | 12000 | 31459 |
| 45 | எம்பீ சுகர்ஸ்,<br>திருநெல்வேலி மாவட்டம்.<br>(இயங்கவில்லை) | 20000 | 0 |
| 46 | மெட்ராஸ் சுகர்ஸ் லிமிடெட்,<br>விழுப்புரம் மாவட்டம். | 12000 | 16290 |
| | **மொத்தம்** | **435200** | **532415** |
| | **ஒட்டு மொத்தம்** | **690200** | **703575** |

## இணைப்பு – 3

## தமிழ்நாட்டில் உள்ள வடிப்பாலைகளின் விவரங்கள்

| வ. எண். | உரிமதாரரின் பெயர் | அனுமதிக்கப் பட்ட தெளிந்த சாராவியின் உற்பத்தி திறன் நாளொன்றுக்கு (கிலோ லிட்டர்) | அனுமதிக்கப் பட்ட தெளிந்த சாராவியின் ஆண்டு உற்பத்தி திறன் (கிலோ லிட்டர்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | கூட்டுறவுத் துறை திருவாளர்கள் | | |
| 1 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, நாமக்கல். | 55 | 16500 |
| 2 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருப்பூர். | 55 | 16500 |
| | தனியார் துறை திருவாளர்கள் | | |
| 3 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட், ஈரோடு. | 67.5 | 20250 |
| 4 | சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஈரோடு. | 120 | 36000 |
| 5 | ஈ.ஐ.டி.பாரி ( இந்தியா ) லிமிடெட், கடலூர். | 75 | 22500 |
| 6 | திருச்சி டிஸ்டிலரீஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி. | 60 | 18000 |
| 7 | சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், விழுப்புரம். | 20 | 6000 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 8 | மோகன் புரூவரீஸ் & டிஸ்டிலரீஸ் லிமிடெட், காஞ்சிபுரம். | 62 | 18600 |
| 9 | கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட், கடலூர். | 80 | 26400 |
| 10 | திரு ஆரூரான் சர்க்கரை ஆலை, தஞ்சாவூர். | 60 | 19800 |
| 11 | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி. | 60 | 20700 |
| 12 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், தேனி. | 45 | 13500 |
| 13 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், திருநெல்வேலி. | 60 | 18000 |
| 14 | பவானி டிஸ்டிலரீஸ் & கெமிக்கல்ஸ், வேலூர். | 44 | 13200 |
| 15 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் லிமிடெட், கடலூர். | 70 | 21000 |
| 16 | ஈ.ஐ.டி.பாரி ( இந்தியா ) லிமிடெட், சிவகங்கை. | 74 | 22200 |
| 17 | பத்மாதேவி சுகர் மில்ஸ் லிமிடெட், காஞ்சிபுரம். | 100 | 30000 |
| 18 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், விழுப்புரம். | 80 | 24000 |
| 19 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், விழுப்புரம். | 100 | 30000 |
| | **மொத்தம்** | **1287.5** | **393150** |

# இணைப்பு – 4

## எத்தனால் தயாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள வடிப்பாலைகளின் விவரங்கள்

| வ. எண். | வடிப்பாலையின் பெயர் | அனுமதிக்கப் பட்ட எத்தனால் உற்பத்தி அளவு நாளொன்றுக்கு (கிலோ லிட்டர்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | **கூட்டுறவுத் துறை திருவாளர்கள்** | |
| 1. | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை. | 30 |
| 2. | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை. | 30 |
| | **தனியார் துறை திருவாளர்கள்** | |
| 3. | சக்தி சுகர்ஸ் லிமிடெட். | 50 |
| 4. | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட். | 45 |
| 5 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட். | 30 |
| 6. | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட். | 30 |
| 7. | ஈ.ஐ.டி. பாரி ( இந்தியா) லிமிடெட். | 45 |
| 8. | திரு ஆரூரான் சர்க்கரை லிமிடெட். | 60 |
| | **மொத்தம்** | **320** |

# இணைப்பு – 5

## இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்கள்

| வ . எண். | உரிமதாரரின் பெயர் | சிறப்புரிமை வழங்கப்பட்ட நாள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | **இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள்**<br>**திருவாளர்கள்** | |
| 1 | மோகன் புரூவரீஸ் & டிஸ்டில்லரீஸ் லிமிடெட், திருவள்ளூர். | 03.03.1982 |
| 2 | சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்டிரீஸ் (பி) லிமிடெட், விழுப்புரம். | 26.07.1982 |
| 3 | சிவா டிஸ்டில்லரீஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | 26.08.1982 |
| 4 | எம்பீ டிஸ்டில்லரீஸ் லிமிடெட், காஞ்சிபுரம். | 06.06.1984 |
| 5 | என்ரிகா என்டர்பிரைஸஸ் (பி) லிமிடெட், திருவள்ளூர். | 28.07.1984 |
| 6 | மிடாஸ் கோல்டன் டிஸ்டில்லரீஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 31.05.2002 |
| 7 | எலைட் டிஸ்டில்லரீஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 28.11.2007 |
| 8 | எஸ்.என்.ஜெ. டிஸ்டில்லர்ஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 30.07.2008 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 9 | கால்ஸ் டிஸ்டில்லரீஸ் (பி) லிமிடெட், புதுக்கோட்டை. | 10.01.2008 |
| 10 | கோல்டன் வாட்ஸ் (பி) லிமிடெட், திருவாரூர். | 20.10.2010 |
| 11 | இம்பீரியல் ஸ்பிரிட்ஸ் & ஒயின் (பி) லிமிடெட், கோயம்புத்தூர். | 24.01.2011 |
| **பீர் உற்பத்தி நிறுவனங்கள் திருவாளர்கள்** | | **இசைவுக் கடிதம் வழங்கப்பட்ட நாள்** |
| 1 | மோகன் புரூவரீஸ் & டிஸ்டில்லரீஸ் லிமிடெட், திருவள்ளூர். | 24.08.1983 |
| 2 | எம்பீ புரூவரீஸ் லிமிடெட், திருவள்ளூர். | 20.03.1987 |
| 3 | யுனைடெட் புரூவரீஸ் லிமிடெட், திருவள்ளூர். | 29.07.1994 |
| 4 | எஸ்.என்.ஜே. புரூவரீஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 08.03.2010 |
| 5 | கால்ஸ் புரூவரீஸ் (பி) லிமிடெட், புதுக்கோட்டை. | 30.09.2010 |
| 6 | அப்போல்லோ டிஸ்டில்லரீஸ் (பி) லிமிடெட், திருவள்ளூர். | 01.07.2010 |
| 7 | ஏ. எம்.புரூவரீஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 03.09.2010 |
| **ஒயின் உற்பத்தி நிறுவனம் திருவாளர்கள்** | | **இசைவுக் கடிதம் வழங்கப்பட்ட நாள்** |
| 1 | கம்பம் வேலி ஒயினாரி (பி) லிமிடெட், தேனி. | 25.10.2007 |